| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்கான குப்பைக் கட்டண வருமானம் பில் இடுதல் ரூபா 51,500 தொகை குறைவாக மற்றும் வியாபார அனுமதிப் பத்திரக் கட்டண வருமானம் பில் இடுதல் ரூபா 1,000 மிகையாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் சபையின் வருமானம் ரூபா 50,500 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காத 06 நிர்மாண வேலைக்களுக்கான கூட்டுப் பெறுமதி ரூபா 2,610,004 தொகைக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் அதே தொகையினால் மிகை ஒதுக்கம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2020 ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக வேலைகள் ஆரம்பிக்க முடியாமல் போனது எனவும் 2021 ஆண்டின் போது அந்த 06 நிர்மாண வேலைகளில் 05 நிறைவேற்றப்பட்டது எனவும். | உடன்பட்ட கடப்பாடுகளுக்காக மாத்திரம் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்கொடுத்தோர்களுக்காக ரூபா 65,074 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் கடன்கொடுத்தோர் மீதி அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 217,294 தொகை பெறுமதியான இயந்திர உபகரணங்களை மூலதனப்படுத்தி இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் போது காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்ட சபையின் முன் அலுவலக நவீன மயப்படுத்துவதற்காக மூலதனச் செலவு ரூபா 71,000 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 146,250 தொகைக்கான மின் பிளேஷர் லய்ட் இருப்பு நுகர்வுப் பண்டங்கள் என கணக்கீடு செய்யப்படாமல் உபகரணங்கள் மற்றும் கருவிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்காமல் மீளாய்வாண்டின் போதும் 2011 ஆம் ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டின் படி வீதவரி அறவீடு செய்யப்பட்டிருந்தமையால் பெறுமதி மதிப்பீடு உரிய காலத்தில் செயற்படுத்தாமல் இருந்த காலம் 05 வருடங்களாக காணப்பட்டதுடன் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் ஒன்றினை இழந்துள்ளது. | மேற்கொள்ளப்படவில்லை என. | |
| ii. | பெற வேண்டிய வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரி ரூபா 21,450 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மூடப்பட்டுள்ள வியாபார நிலையங்களில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவைத் தொகையினை பதிவழிப்பதற்காக ஆளுனருக்கு சமர்ப்பிக்கின்றேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம்<br>------------------------------------------------ | | |
| i. | பெற வேண்டிய வியாபார அனுமதிப்பத்திரம் ரூபா 725,630 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 710,880 தொகையினை பதிவழிப்பதற்காக ஆளுனருக்கு சமர்ப்பித்தேன். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| ii. | பெற வேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 302,000 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதி நிலுவைத் தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்<br>------------------------------------------------ | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 4,855,135 தொகை மற்றும் ரூபா 25,245,653 தொகையாகும். | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான கடை அறைகளுக்காக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2018 ஜனவரி 26 திகதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி மாதாந்த கடை வாடகை ஆரம்பத்தில் காணப்படும் 06 கடைஅறைகளுக்காக ரூபா 1,350 வீதமும் இறுதியாக உள்ள 06 கடையறைகளில் இருந்து ரூபா 2,000 வீதமும் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 மே 18 திகதிய சபைத் தீர்மானத்தின் படி அந்த கடையறைகளுக்காக முறையே ரூபா 450 தொகை மற்றும் ரூபா 500 தொகை வீதம் அறவிடப்பட்டிருந்தமையால் 2018 ஆண்டு ஜூலை மாதம் முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை சபை இழந்துள்ள வருமானம் ரூபா 432,000 தொகையாகும். | கடையறை நிர்மாணிக்கப்பட்ட பகுதி முன்னேற்றமடையாத கிராமப் பகுதி ஒன்றாக காணப்படுவதனால் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி வாடகை அறவிடப்படாமல் சபை தீர்மானத்தின் படி வாடகை அறவிடப்பட்டது. | பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தில் இருந்து கிடைத்துள்ள பெறுமதி மதிப்பீட்டை செயற்படுத்த வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முன்னைய ஆண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 848,362 தொகை செலவிடப்பட்டு மயுராபுர வாராந்த சந்தை வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சிற்றுண்டிச்சாலைக் கட்டிடத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சிற்றுண்டிச்சாலையை வழங்குவதற்கு ஆட்களை இனங்கண்டிருந்த போதிலும் அந்த இடங்களில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக இணக்கம் தெரிவித்திருக்கவில்லை என. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |